www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 17
## (பொது அறிவு)

1. ரோமானியரின் வர்த்தகத்தினால் முதன்முதலில் பெரிதும் பயனடைந்த அரசு
அ) சேர அரசு ஆ) சோழ அரசு
இ) பாண்டிய அரசு ஈ) பல்லவ அரசு

2. 'சங்கீரண ஜதி' என்ற பட்டப்பெயரில் அறியப்படும் மன்னர்
அ) முதலாம் மகேந்திர வர்மன்
ஆ) முதலாம் நரசிம்மவர்மன்
இ) கிருஷ்ண தேவராயர்
ஈ) இரண்டாம் குலோத்துங்கன்

3. பல்லவர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட அளவைகளுள் மிகக் குறைந்தது எது?
அ) கடுநாழி ஆ) பிடி
இ) நாழி ஈ) ஆழாக்கு

4. 'மகர சங்கராந்தி விழா' தமிழகம் அல்லாத பிற மாநிலங்களில் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?
அ) சித்திரை 1 ஆ) ஆடி 1
இ) புரட்டாசி 1 ஈ) தை 1

5. சோழர் காலத்தில் இசையில் எத்தனை பண்கள் உபயோகிக்கப்பட்டன?
அ) 7 ஆ) 18
இ) 23 ஈ) 28

6. தொல்காப்பியத்திற்கு விளக்க உரை எழுதியவர்
அ) சேனாவரையர் ஆ) அடியார்க்கு நல்லார்
இ) பரிமேலழகர் ஈ) மயிலை நாதர்

7. கிருஷ்ண தேவராயரின் முகத்தில் காணப்பட்ட தழும்புகள் எந்த நோயினால் ஏற்பட்டவை?
அ) சின்னம்மை ஆ) பெரியம்மை
இ) மஞ்சள் காமாலை ஈ) தொழுநோய்

8. வேலூரின் முதல் நாயக்கர் யார்?
அ) வையப்ப நாயக்கர் ஆ) துப்பாக்கி நாயக்கர்
இ) சின்ன நாயக்க பொம்மர் ஈ) செவப்ப நாயக்கர்

9. ஒரு பொருளின் வெப்பம் மற்றொரு பொருளுக்கு ஊடகமின்றிப் பரவுவது
அ) வெப்பக் கதிர்வீசல் ஆ) வெப்பச்சலனம்
இ) வெப்பக் கடத்தல் ஈ) உள்ளுறை வெப்பம்

10. இரகுநாத சேதுபதிக்கு 'திருமலை சேதுபதி' என்ற பட்டத்தை வழங்கியவர்
அ) சடைக்கத் தேவர் ஆ) திருமலை நாயக்கர்
இ) கிழவன் சேதுபதி ஈ) குட்டன் சேதுபதி

11. கர்நாடகப் பகுதியின் முதல் நவாப்
அ) சுல்பிகர் கான் ஆ) தாவுத் கான்
இ) சததுல்லா கான் ஈ) அன்வாருத்தீன்

12. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள எட்டு வழிகாட்டுக் கொள்கைகளில் மதச்சார்பின்மை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
அ) 1வது ஆ) 3வது
இ) 5வது ஈ) 7வது

13. காவிரியில் 'மேலணை' கட்டப்பட்ட ஆண்டு
அ) 1825 ஆ) 1839
இ) 1840 ஈ) 1845

14. பல்லவர் காலத்தில் சமஸ்கிருத மொழியின் சிறந்த இலக்கியக் கூடமாகத் திகழ்ந்த இடம்
அ) மாமல்லபுரம் ஆ) மயிலாப்பூர்
இ) கும்பகோணம் ஈ) காஞ்சிபுரம்

15. பொதுக்கல்வி இயக்குநரகம் அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1821 ஆ) 1822
இ) 1823 ஈ) 1824

16. கல்வி வளர்ச்சியின் மகாசாசனம் என்று எது அழைக்கப்பட்டது?
அ) ஹண்டர் குழு அறிக்கை
ஆ) 1857ம் ஆண்டு சட்ட அறிக்கை
இ) 1822ம் ஆண்டு கல்விக் குழு அறிக்கை
ஈ) 1854ம் ஆண்டு சார்லஸ் அறிக்கை

17. 1920ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி சார்பில் வெற்றி பெற்று சென்னை மாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர்
அ) T.M. சிவஞானப் பிள்ளை ஆ) சுப்பராயலு ரெட்டியார்
இ) P.T. தியாகராய ரெட்டி ஈ) Dr. நடேச முதலியார்

18. இந்தியாவில் அரசுத் தேர்வாணையக்குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1924 ஆ) 1926
இ) 1927 ஈ) 1929

19. 'உலகப்பொது சுகாதார நாள்' அனுசரிக்கப்படும் நாள்?
அ) ஜனவரி 9 ஆ) ஏப்ரல் 7
இ) ஜூலை 15 ஈ) அக்டோபர் 21

20. மூத்தக் குடிமக்களுக்கு உணவளிக்கும் திட்டம்
அ) சுவாதர் திட்டம் ஆ) ஆனந்தம்
இ) அன்னபூர்ணா ஈ) மகிளா மண்டல்

21. சென்னையில் தமிழிசைச் சங்கத்தை நிறுவியர்
அ) சர் அண்ணாமலை செட்டியார்
ஆ) ஏ.சி. முத்தையா செட்டியார்
இ) செம்மங்குடி சீனிவாச ஐயர்
ஈ) சர் தியாகராய செட்டியார்

22. மக்களாட்சி (Democracy) என்ற சொல் எந்த மொழியிலிருந்து பெறப்பட்டது?
அ) இலத்தீன் ஆ) ஃபிரெஞ்சு
இ) கிரேக்கம் ஈ) அரபு

23. அனைத்து குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வியை செயல்படுத்த வலியுறுத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு
அ) சட்டப் பிரிவு 45 ஆ) சட்டப் பிரிவு 39
இ) சட்டப் பிரிவு 39(F) ஈ) சட்டப் பிரிவு 24

24. இராஷ்டிரகூட மன்னர்களில் மிகச் சிறந்தவராக விளங்கியவர்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

அ) தண்டிதுர்கா ஆ) முதலாம் கிருஷ்ணன்
இ) இரண்டாம் கிருஷ்ணன் ஈ) மூன்றாம் கோவிந்தர்

25. அரசியல் சிந்தனையாளர் மாக்கியவல்லி, எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) ஜெர்மனி ஆ) இத்தாலி
இ) கிரேக்கம் ஈ) ஃபிரான்ஸ்

26. சிந்து சமவெளி மக்களின் சமய வழிபாட்டின் சின்னமாக விளங்கிய மரம் எது?
அ) ஆல மரம் ஆ) அசோக மரம்
இ) அரச மரம் ஈ) வேப்ப மரம்

27. அடிப்படை உரிமைகள் யாரால் / எவற்றால் நடைமுறைப்படுத்தக் கூடியவை?
அ) பிரதமர் ஆ) நாடாளுமன்றம்
இ) ஜனாதிபதி ஈ) நீதிமன்றங்கள்

28. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 300 (அ) எதைப் பற்றிக்கூறுகிறது?
அ) குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்
ஆ) சபாநாயகரின் அதிகாரங்கள்
இ) சொத்துரிமை
ஈ) சுரண்டலுக்கெதிரான உரிமை

29. இந்தியாவில் வான்வழிப் போக்குவரத்து எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1924 ஆ) 1930
இ) 1932 ஈ) 1934

30. அபார்தீட் கொள்கையைப் பின்பற்றிய நாடு
அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து
இ) தென் ஆப்ரிக்கா ஈ) பிரேஸில்

31. எலெக்ட்ரானின் ஈரியல்புத் தன்மையை விளக்கியவர்
அ) போர் ஆ) டி பிராக்ளே
இ) ஹெய்சன்பர்க் ஈ) பாலி

32. எலெக்ட்ரான் கவர் தன்மையின் அலகு என்ன?
அ) கிலோ ஜூல் மோல்$^{-1}$ ஆ) ஜூல்
இ) கிலோ ஜூல் ஈ) கிலோ ஜூல் மோல்

33. லெட் லித்தார்ஜ் எனப்படுபவது
அ) $Pb_3O_4$ ஆ) $Pb(OH)_2$
இ) PbO ஈ) $PbSO_4$

34. மனித உடலில் ATP மூலக்கூறுகளில் ஆற்றலை சேமிக்கும் ATP மூலக்கூறில் பயன்படுவது
அ) கால்சியம் ஆ) பொட்டாசியம்
இ) சோடியம் ஈ) பாஸ்பரஸ்

35. 'சால்கோஜென்ஸ்' என்பவை
அ) தாதுவை உருவாக்கும் தனிமங்கள்
ஆ) சுண்ணாம்பை உருவாக்கும் தனிமங்கள்
இ) அமிலத்தை உருவாக்கும் தனிமங்கள்
ஈ) காரத்தை உருவாக்கும் தனிமங்கள்

36. ஹேலஜன்களில் வெளிர் மஞ்சள் நிற வாயு எது?
அ) ஃப்ளூரின் ஆ) குளோரின்
இ) புரோமின் ஈ) அயோடின்

37. பற்சிதைவைத் தடுப்பதில் பயன்படுவது
அ) $CaF_2$ ஆ) $SF_6$
இ) NaF ஈ) $UF_6$

38. எந்தத் தனிமத்தினை எப்பொழுதும் தண்ணீரினுள்ளேயே வைத்திருக்க வேண்டும்?
அ) P ஆ) Na
இ) S ஈ) Si

39. மிகக் குறைந்த அணு எண்ணைக்கொண்ட இடைநிலைத் தனிமம்
அ) டைட்டானியம் ஆ) ஜிங்க்
இ) லாந்தனம் ஈ) ஸ்கேண்டியம்

40. லித்தியத்தை எதனால் தாக்கி டிரிட்டியம் தயாரிக்கப்படுகிறது?
அ) மேசான்கள்
ஆ) மெதுவாகச் செல்லும் நியூட்ரான்கள்
இ) டியூட்ரான்கள்
ஈ) வேகமாகச் செல்லும் நியூட்ரான்கள்

41. ராக்கெட்டுகளில் உந்துபொருளாகப் பயன்படுவது
அ) $H_2O_2$ ஆ) $D_2O$
இ) $ND_3$ ஈ) $C_2H_4$

42. புகையிலைப் பதப்படுத்துதல் மற்றும் மண்வள மேம்பாட்டில் பயன்படுவது
அ) வைரஸ் ஆ) யூக்ளினா
இ) பாக்டீரியா ஈ) பாரமீசியம்

43. பறவைகளில் உள்ள சிறுநீர்ப்பைகளின் எண்ணிக்கை
அ) 1 ஆ) 2
இ) 3 ஈ) இல்லை

44. சிட்ரஸ் சைனன்சிஸ் என்பது
அ) எலுமிச்சை ஆ) ஆரஞ்சு
இ) பேரீச்சை ஈ) அன்னாசி

45. நவீன தாவரவியலின் தந்தையான கார்ல் லின்னேயஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ) ஜெர்மனி ஆ) ஹாலந்து
இ) ஸ்வீடன் ஈ) டென்மார்க்

46. ஈக்கோர்னியா மற்றும் பிஸ்டியா போன்ற நீர்த்தாவரங்களில் வேர்த்தூவிகளுக்குப் பதிலாக காணப்படும் அமைப்பு
அ) வேர்ப்புற வளரிகள் ஆ) வேர் முடிச்சுகள்
இ) வேர்த்தூவிகள் ஈ) வேர்ப்பைகள்

47. எக்கினோடெர்மேட்டா என்பவை
அ) கணுக்காலிகள் ஆ) முட்தோலிகள்
இ) மெல்லுடலிகள் ஈ) உருளைப் புழுவினம்

48. பூஞ்சைகளில் பாலிலா இனப்பெருக்கம் எதன் மூலம் நடைபெறவில்லை?
அ) துண்டாதல்
ஆ) சூஸ்போர்கள்
இ) ஸ்போரோஞ்சியோஸ்போர்கள்
ஈ) கொனிடியோஸ்போர்கள்

49. வெப்ப இயக்கவியலின் முதல் விதி எதன் அழிவின்மையால் உண்டாகும் விளைவு ஆகும்?
அ) ஆற்றல் ஆ) நிறை
இ) மின்னூட்டம் ஈ) உந்தம்

www.LatestWalkin.com

50. வாயுவில் ஒலியின் திசைவேகத்தைப் பாதிக்காதது எது?
அ) நிறை ஆ) வெப்பநிலை
இ) அழுத்தம் ஈ) தன் வெப்ப ஏற்புத் திறன்

51. ஓரிடத்தின் புவிகாந்தப் புலத்தின் செங்குத்துக் கூறு மற்றும் கிடைத்தளக் கூறு சமமாக இருப்பின் காந்தச் சரிவின் மதிப்பு
அ) 90° ஆ) 45°
இ) 30° ஈ) 0°

52. விலகு காந்தமானியில் டேன் B நிலையில் வைக்கப்படும் காந்தத்தின் திசை
அ) தெற்கு-மேற்கு ஆ) வடக்கு-மேற்கு
இ) வடக்கு-தெற்கு ஈ) கிழக்கு-மேற்கு

53. இரு இணையான சமதள ஆடிகளுக்கு இடையிலுள்ள பொருளின் பிம்பங்களின் எண்ணிக்கை
அ) எண்ணிலடங்காதது ஆ) 1
இ) 0 ஈ) 3

54. செண்டிரோலெசித்தல் முட்டைகளைத் தோற்றுவிக்கும் உயிரி
அ) ஊர்வன ஆ) மனிதர்கள்
இ) தவளை ஈ) பூச்சிகள்

55. 'செல் என்று பெயரிட்டவர்
அ) லூவன் ஹூக் ஆ) இராபர்ட் பிரௌன்
இ) கலிலியோ ஈ) இராபர்ட் ஹூக்

56. மனித பெண் இனப்பெருக்க மண்டலத்தில் கருப்பையானது எந்த வடிவத்தில் இருக்கும்?
அ) பேரிக்காய் வடிவம் ஆ) கோள வடிவம்
இ) அவரை விதை வடிவம் ஈ) உருண்டை வடிவம்

57. 'பல் தொழில் விற்பன்னர்' என்று அழைக்கப்படும் மனித உறுப்பு
அ) கல்லீரல் ஆ) இதயம்
இ) தோல் ஈ) நரம்பு

58. மாதுளம்பழம் பற்றிய தேசிய ஆராய்ச்சி மையம் உள்ள இடம்
அ) ஹிஸ்ஸார் ஆ) ஷோலாபூர்
இ) புனே ஈ) இம்பால்

59. ஆசியாவின் முதல் ஏற்றுமதி சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைந்த இடம்
அ) இஸ்லாமாபாத் ஆ) மேல்
இ) சிங்கப்பூர் ஈ) கண்ட்லா

60. இந்திய குடியரசுத் தலைவரை நீக்கும் அதிகாரம் பற்றிக் குறிப்பிடும் இந்திய அரசியல் சட்டப் பிரிவு
அ) சட்டப் பிரிவு 52 ஆ) சட்டப் பிரிவு 61
இ) சட்டப் பிரிவு 64 ஈ) சட்டப் பிரிவு 67

61. 'மைய வங்கி என்பது வங்கிகளின் வங்கி' என்று கூறியவர்
அ) பி.ஏ. சாமுவேல்சன் ஆ) எச்.ஏ. ஷா
இ) ஹாட்ரே ஈ) ஆடம் ஸ்மித்

62. புவியில் தோன்றிய முதல் உயிரினம் என்று எவை கருதப்படுகின்றன?
அ) மீன்கள் ஆ) பாக்டீரியாக்கள்
இ) நீலப்பச்சைப் பாசியினம் ஈ) அமீபாக்கள்

63. புவியின் சுற்றளவு எவ்வளவு?
அ) 40,067 கி.மீ. ஆ) 32,567 கி.மீ.
இ) 25,863 கி.மீ. ஈ) 37,483 கி.மீ.

64. 23½° தெற்கு அட்சம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) கடக ரேகை ஆ) மகர ரேகை
இ) ஆர்க்டிக் வட்டம் ஈ) அண்டார்க்டிக் வட்டம்

65. கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 10 மீட்டர் உயரம் மேலே செல்லும்போது
அ) 1 மில்லி பார் அழுத்தம் குறையும்
ஆ) 1 மில்லி பார் அழுத்தம் அதிகரிக்கும்
இ) முதலில் குறைந்து பின்னர் அதிகரிக்கும்
ஈ) மாற்றம் எதுவும் இருக்காது

66. ஆறு, S வடிவில் வளைந்து நெளிந்து செல்லும் வளையங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) கென்யான்கள் ஆ) அணைக்கரைகள்
இ) சதுப்பு நிலங்கள் ஈ) மியாண்டர்ஸ்

67. இந்தியாவில் முட்புதர்க் காடுகள் காணப்படும் மாநிலம்
அ) ஜம்மு-காஷ்மீர் ஆ) அஸ்ஸாம்
இ) ராஜஸ்தான் ஈ) பஞ்சாப்

68. ஆனி மாதத்திற்கு உகந்த மரமாகத் தமிழர்கள் கருதுவது
அ) செங்கருங்காலி மரம் ஆ) அத்தி மரம்
இ) வில்வ மரம் ஈ) புன்னை மரம்

69. செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டமாகப் பிரிந்த ஆண்டு
அ) 1994 ஆ) 1995
இ) 1996 ஈ) 1997

70. 1 நாள் என்பது எவ்வளவு நாழிகைகளுக்குச் சமம்?
அ) 10 நாழிகைகள் ஆ) 12 நாழிகைகள்
இ) 24 நாழிகைகள் ஈ) 60 நாழிகைகள்

71. தேசிய வேளாண்மை ஆணையம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1976 ஆ) 1980
இ) 1978 ஈ) 1982

72. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தமிழகத்தின் கவர்னராக இருந்தவர் யார்?
அ) வெலிங்டன் பிரபு ஆ) கிருஷ்ண குமாரசிங்ஜி பவசிங்
இ) சர்தார் உஜ்ஜல் சிங் ஈ) சர் ஆர்ச்சிபால் எட்வர்ட் நை

73. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி எங்கிருந்து கிடைக்கிறது?
அ) ஜார்க்கண்ட் ஆ) நெய்வேலி
இ) ரஷ்யா ஈ) ஜப்பான்

74. இந்தியாவின் முதல் நீர்மின் சக்தித் திட்டம் எந்த ஆற்றில் அமைக்கப்பட்டது?
அ) சிந்து ஆ) கங்கை
இ) பிரம்மபுத்திரா ஈ) காவிரி

75. காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ம் நாள் எந்த வருடம் முதல் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது?
அ) 2005 ஆ) 2006
இ) 2007 ஈ) 2008

76. தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் திரைப்படம்
அ) ஆலம் ஆரா ஆ) கீசக வதம்
இ) காளிதாஸ் ஈ) ஹரிச்சந்திரா

www.LatestWalkin.com

77. தமிழகத்தில் முதல் உழவர் சந்தையும், 100வது உழவர் சந்தையும் தொடங்கப்பட்ட இடம்
அ) மதுரை ஆ) கோயம்புத்தூர்
இ) திருவாரூர் ஈ) சென்னை

78. தமிழகத்தில் உள்ளாட்சி தினமாகக் கொண்டாடப்படும் நாள் எது?
அ) நவம்பர் 1 ஆ) அக்டோபர் 1
இ) ஜனவரி 1 ஈ) பிப்ரவரி 1

79. சோழர்கால உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிக் கூறும் உத்திரமேரூர் கல்வெட்டுகள் தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் உள்ளன?
அ) திருநெல்வேலி ஆ) புதுக்கோட்டை
இ) தஞ்சாவூர் ஈ) காஞ்சிபுரம்


80. ஒரு கூட்டுத் தொடரில் nவது உறுப்பு காண உதவும் வாய்ப்பாடு
அ) $t_n=a+nd$ ஆ) $t_n=a+(n-1)d$
இ) $t_n=ad$ ஈ) $t_n=a-(n+1)d$

81. கணங்களின் நவீன கருத்தியலின் தந்தை
அ) குரோநெக்கர் ஆ) எர்னஸ்டு ஜெர்மலோ
இ) கேன்டர் ஈ) கர்ட்கோடெல்

82. சமீபத்தில் விண்ணில் ஏவப்பட்ட 'ஹைலாஸ்' என்ற செயற்கைக்கோள் எந்த நாட்டிற்குச் சொந்தமானது?
அ) இங்கிலாந்து ஆ) இந்தியா
இ) இஸ்ரேல் ஈ) அமெரிக்கா

83. ஒரு சதுரத்தின் மூலைவிட்டத்தின் வழியாக நீட்டக் கிடைக்கும் நாணானது ஏற்படுத்தும் பரப்பளவு சதுரத்தின்
அ) பரப்பளவின் ஒரு மடங்கு ஆ) பரப்பளவின் இரு மடங்கு
இ) சுற்றளவின் ஒரு மடங்கு ஈ) சுற்றளவின் இரு மடங்கு

84. படத்தில் 0 மையம் $m\underline{|OAC}=35^0$, $m\underline{|OBC}=45^0$ எனில், $m\underline{|AOB}$ கண்டுபிடி
அ) $80^0$
ஆ) $120^0$
இ) $160^0$
ஈ) $100^0$




85. 7x-5y=K என்ற நேர்க்கோடானது (1,1) என்ற வழியாகச் செல்கிறது எனில், Kன் மதிப்பு யாது?
அ) 0 ஆ) 1
இ) -1 ஈ) 2

86. 27,28,34,36,39,59 என்ற புள்ளி விவரங்களுக்கு வீச்சுக் கெழு காண்க.
அ) 0.372 ஆ) 32
இ) 0.32 ஈ) 27

87. நிகழ்ச்சி நடைபெறாமலிருப்பதற்கான $(\overline{E})$ நிகழ்வானது
அ) $n(\overline{E})=\frac{p(E)}{n(S)}$ ஆ) $n(\overline{E})=1-n(S)$
இ) $p(\overline{E})=1-p(\overline{E})$ ஈ) $p(\overline{E})=1-p(S)$

88. நடனம், நுண்கலை பற்றிக் கூறும் உபவேதம்
அ) ஆயுர் வேதம் ஆ) காந்தர்வ வேதம்
இ) தனுர் வேதம் ஈ) சில்ப வேதம்

89. மௌரியர் காலத்தில் 'குதபுருஷர்கள்' என்று அழைக்கப்பட்டவர்கள் யார்?
அ) செய்தி நிருபர்கள் ஆ) எழுத்தர்கள்
இ) ஒற்றர்கள் ஈ) அரசர்கள்

90. இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களிலிருந்து லோக் சபாவிற்கு எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?
அ) 52 ஆ) 2
இ) 25 ஈ) 20

91. உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஓய்வு பெறும் வயது
அ) 58 ஆ) 60
இ) 62 ஈ) 65

92. பரப்பளவில் உலகின் 3வது பெரிய கண்டம்
அ) ஆப்ரிக்கா ஆ) வட அமெரிக்கா
இ) தென் அமெரிக்கா ஈ) ஐரோப்பா

93. ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) தொடங்கப்பட்ட வருடம்
அ) 1956 ஆ) 1957
இ) 1966 ஈ) 1967

94. டென்மார்க் நாட்டு நாடாளுமன்றத்தின் பெயர்
அ) மஜ்லிஸ் ஆ) டயட்
இ) நெஸ்ஸட் ஈ) ஃபோல்கட்டிங்

95. ரைனாலஜி (Rhinology) என்பது எதைப் பற்றிக் கற்கும் அறிவியல் பிரிவு
அ) மூக்கு ஆ) நாக்கு
இ) தொண்டை ஈ) வாய்

96. ஆந்திரப்பிரதேசத்தின் புதிய முதலமைச்சர்
அ) ரோசய்யா ஆ) ஜெகன்மோகன் ரெட்டி
இ) கிரண்குமார் ரெட்டி ஈ) Y.S. ராஜசேகர ரெட்டி

## விடைகள் :

1.இ), 2.அ), 3.ஆ), 4.ஈ), 5.இ), 6.அ), 7.ஆ), 8.இ), 9.அ), 10.ஆ), 11.அ), 12.இ), 13.ஆ), 14.ஈ), 15.இ), 16.ஈ), 17.ஆ), 18.ஈ), 19.ஆ), 20.இ), 21.அ), 22.இ), 23.அ), 24.ஈ), 25.ஆ), 26.இ), 27.ஈ), 28.இ), 29.ஆ), 30.இ), 31.ஆ), 32.அ), 33.இ), 34.ஈ), 35.அ), 36.அ), 37.இ), 38.ஆ), 39.ஈ), 40.ஆ.), 41.அ), 42.இ), 43.ஈ), 44.ஆ), 45.இ), 46.ஈ), 47.ஆ), 48.அ) , 49.அ), 50.இ), 51.ஆ), 52.ஈ), 53.அ), 54.ஈ), 55.ஈ), 56.அ), 57.இ), 58.ஆ), 59.ஈ), 60.ஆ), 61.அ), 62.இ), 63.அ), 64.ஆ), 65.அ), 66.ஈ), 67.இ), 68.ஆ), 69.இ), 70.ஈ), 71.அ), 72.ஈ), 73.அ), 74.ஈ), 75.ஆ), 76.இ), 77.அ), 78.அ), 79.ஈ), 80.ஆ), 81.இ), 82.ஆ), 83.ஆ), 84.இ), 85.ஈ), 86.அ), 87.இ), 88.ஆ), 89.இ), 90.ஈ), 91.இ), 92.ஆ), 93.இ), 94.ஈ), 95.அ), 96.இ),

www.LatestWalkin.com

www.LatestWalkin.com